**பிப்ரவரி – 18**

# TNPSC துளிகள்

- மாநிலத்தில் அறக்கட்டளை அல்லது சமூக அமைப்பு அல்லது லாப நோக்கில்லா நிறுவனங்களினால் ஒரே வளாகத்தைக் கொண்ட தனியார் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்துவதற்கான மசோதாவை தமிழ்நாடு அரசானது அறிமுகப்படுத்தியது.
  - பரிந்துரைக்கப்பட்டுள்ள தனியார்ப் பல்கலைக்கழகமானது பசுமை முயற்சி முன்னெடுப்பு மற்றும் பல்துறை படிப்புகளைக் கொண்டிருக்கும்.
- தமிழ்நாடு தொழில்முனைவுத் திறன் வளர்ச்சி மற்றும் புத்தாக்க நிறுவனத்தினால் (Tamil Nadu Innovation Grand Challenge - TNIGC) "தமிழ்நாடு புத்தாக்க கிராண்ட் சவால்" என்ற ஒரு "ஸ்டார்ட் அப்" (புதிய தொழில் தொடங்குதல்) சவால் நிகழ்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டது.
- சண்டிகரைச் சேர்ந்த விமானப் படை அதிகாரியான ஹீனா ஜெய்ஸ்வால் இந்திய விமானப் படையின் முதலாவது பெண் விமானப் பொறியாளராக உருவெடுத்துள்ளார். சென்ற ஆண்டு வரையில் விமானப் பொறியாளர் பிரிவு முழுவதும் ஆண்களின் ஆதிக்கமாகவே இருந்தது.
- மத்திய உள்துறை அமைச்சகமானது பஞ்சாப்பின் குருதாஸ்பூர் மாவட்டத்தில் உள்ள தேரா பாபா நானக் நிலப்பகுதியை பாகிஸ்தானில் உள்ள கர்தார்பூர் சாஹிப் குருத்வாராவைப் பார்வையிடுவதற்கு அங்கீகாரம் கொண்ட நுழைவு மற்றும் வெளியேற்ற புலம்பெயர்வு சோதனைச் சாவடியாக அங்கீகரித்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு கூலித் தொழிலாளர்கள் நலத் திட்டம் 1994 - திருத்தம்

- தமிழ்நாடு கூலித் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம் 1994-ல் ஒரு திருத்தம் செய்வதன் மூலம் நகரத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் அம்மா உணவகத்தில் உணவை இலவசமாகப் பெற முடியும் என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப் படவிருக்கிறது.
- பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் விநியோகத் துறையானது இதற்கான ஒரு அரசாணையைப் பிறப்பிக்கவிருக்கிறது.
- இத்திட்டமானது தொழிலாளர்கள் தங்களுக்குத் தேவையான உணவை இலவசமாகப் பெற அனுமதிக்கிறது. மேலும் அவர்களின் மாதச் செலவானது உணவகங்களினால் பராமரிக்கப்படும்.
- இந்த செலவினங்கள் அந்த உணவகங்களுக்கு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தினால் (TNCWWD - Tamil Nadu Construction Workers Welfare Board) செலுத்தப்படும்.

## நெகிழிப் பொருட்களின் மீதான தடையை மீறுபவர்கள் - தண்டனை

- தமிழ்நாடு அரசானது நெகிழிப் பொருட்களின் மீதான தடையை மீறுபவர்கள் மீது தண்டனை விதிப்பதற்கென்று ஒரு மசோதாவை நகராட்சிச் சட்டத்தைத் திருத்துவதற்காக மாநில சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- நெகிழிப் பொருட்களை இருப்பு வைத்தல், விநியோகித்தல், மற்ற இடங்களுக்கு கொண்டு செல்லுதல் மற்றும் ஒருமுறை பயன்பாடு கொண்ட நெகிழிகளை விநியோகித்தல் ஆகியவற்றை முதல்முறையாக மேற்கொள்ளும் நபர்களுக்கு ரூ.25,000 அபராதம் விதிக்கப்படும். இதையே இரண்டாவது முறை மேற்கொண்டால் ஐம்பதாயிரமும் மூன்றாவது முறை மேற்கொண்டால் ரூ. 1 லட்சமும் அபராதம் விதிக்கப்படும்.
- வணிக வளாகங்கள், ஜவுளி நிறுவனங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற பெரு வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் மற்றும் விநியோகிக்கப்படும் ஒரு முறை பயன்பாடு கொண்ட நெகிழிப் பொருட்களுக்கு அபராதம் விதிக்கப்படும். முதல்முறையாக இவற்றைப் பயன்படுத்தினால் பத்தாயிரமும் இரண்டாவது முறையாக இவற்றைப் பயன்படுத்தினால் பதினைந்தாயிரமும் மூன்றாவது முறையாக இவற்றைப் பயன்படுத்தினால் இருபத்தைந்தாயிரம் ரூபாயும் அபராதம் விதிக்கப்படும்.
- இந்த மசோதா பின்வரும் சட்டங்களில் திருத்தம் செய்யவிருக்கிறது.
    - சென்னை நகர மாநகராட்சிச் சட்டம், 1919
    - தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920
    - மதுரை நகர மாநகராட்சிச் சட்டம், 1971
    - கோயம்புத்தூர் நகர மாநகராட்சிச் சட்டம், 1981

# தேசியச் செய்திகள்

## ஜாலியன் வாலாபாக் தேசிய நினைவக (திருத்த) மசோதா, 2018

- 16வது மக்களவையின் கடைசிக் கூட்டத் தொடரில் ஜாலியன் வாலாபாக் தேசிய நினைவக (திருத்த) மசோதா, 2018 ஆனது நிறைவேற்றப்பட்டது.
- 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி அமிர்தசரஸின் ஜாலியன் வாலாபாக்கில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் நினைவாக தேசிய நினைவகத்தை அமைப்பதற்காக 1951 ஆம் ஆண்டு ஜாலியன் வாலாபாக் தேசிய நினைவகச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது.
- 1951 ஆம் ஆண்டு சட்டமானது தேசிய நினைவகத்தை நிர்வகிப்பதற்காக அறக்கட்டளையை ஏற்படுத்தவும் வழி செய்துள்ளது. அந்த அறக்கட்டளையானது பின்வருபவர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும்.
    - தலைவர் என்ற பதவியில் பிரதமர்,
    - இந்திய தேசியக் காங்கிரஸின் தலைவர்
    - மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர்
    - மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர்

- பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சர் மற்றும் ஆளுநர்
- மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட மூன்று சிறந்த ஆளுமைகள்

***2018 திருத்தம்***

- 2018 ஆம் ஆண்டு திருத்த மசோதாவானது அறக்கட்டளையில் உறுப்பினராக இருக்கும் இந்திய தேசியக் காங்கிரஸின் தலைவரை நீக்குகிறது.
- மேலும் மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் யாரும் இல்லாத பொழுது மக்களவையில் மிகப்பெரிய எதிர்க்கட்சியின் தலைவரே அறக்கட்டளையில் உறுப்பினராக இருப்பார் என்றும் தெளிவுபடுத்துகிறது.
- 1951 ஆம் ஆண்டு சட்டத்தின்படி மத்திய அரசினால் நியமிக்கப்படும் புகழ்பெற்ற 3 நபர்கள் 5 ஆண்டுகள் பதவிக் காலத்தைக் கொண்டிருப்பர். மேலும் அவர்கள் மறுமுறையும் அப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்கள் என்று அச்சட்டம் கூறுகிறது.
- மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட 3 உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடையும் முன்னரே எந்தவொரு காரணமும் இல்லாமல் அவர்களை மத்திய அரசு நீக்குவதற்கான ஒரு புதிய பிரிவை 2018 ஆம் ஆண்டு மசோதா இணைத்துள்ளது.

## DODO-வின் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு நிலையங்கள் - வழிகாட்டுதல்கள்

- 2019 ஆம் ஆண்டின் பெட்ரோடெக் மாநாட்டின் ஒரு பகுதியாக, இந்தியாவில் வணிகர்களுக்குச் சொந்தமான மற்றும் வணிகர்களே நிர்வகிக்கும் (DODO – Dealer Owned and Dealer Operated) அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு நிலையங்களை அமைப்பதற்கான வழிகாட்டுதல்களை மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் வெளியிட்டார்.
- இந்தப் புதிய வழிகாட்டுதலானது DODO கொள்கையுடன் பொருந்தும் வகையில் ஒரே மாதிரியான அமைப்பைக் கொண்டு வருவதற்கான ஒரு ஆலோசகராக இது செயல்படும்.
- மேலும் இது சுற்றுச்சூழலில் சுகாதாரம் மற்றும் தூய்மை ஆகியவற்றை ஏற்படுத்த உதவும்.
- இந்தப் புதிய வழிகாட்டுதலானது நாடெங்கிலும் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு எளிதில் கிடைக்கப் பெறுவதற்கு உதவும். மேலும் இது மக்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் வணிக ரீதியிலான அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயுவிற்கு மாற உதவும்.

## ரபேல் ஒப்பந்தம் - தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கை

- ரபேல் ஒப்பந்தம் மீதான இந்தியக் கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கையானது இந்தியக் குடியரசுத் தலைவரிடம் அளிக்கப்பட்டு, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அது சமர்ப்பிக்கப்பட்டது.
- இந்த தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கையானது, "இந்திய விமானப் படையின் மூலதனக் கொள்முதல்" என்ற தலைப்பைக் கொண்டுள்ளது.
- இந்த அறிக்கையானது இரண்டு தொகுதிகளைக் கொண்டுள்ளது. அதில் ஒரு தொகுதி ரபேல் ஒப்பந்தம் குறித்தும் ஒப்பந்தத்தின் விலை மற்றும் கொள்முதல் குறித்தும் விவரிக்கிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்


## இந்திய-ஜெர்மானிய சுற்றுச்சூழல் மன்றம்

- மூன்றாவது இந்திய-ஜெர்மானிய சுற்றுச்சூழல் மன்றமானது, "தூய்மையான காற்று பசுமையான பொருளாதாரம்" என்ற கருத்துருவுடன் புதுதில்லியில் நடத்தப்பட்டது.
- குழு விவாதங்கள் மற்றும் இணையான அமர்வுகளின் மூலம் இந்த ஒரு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும் இது காற்று மாசுபாடுகளைக் கட்டுப்படுத்துதல், கழிவு மேலாண்மை மற்றும் நிலையான பொருளாதாரத்திற்கான சவால்கள், தீர்வுகள் மற்றும் கட்டமைப்பு நிலைகள் ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்துகிறது.
- மேலும் இது, பாரீஸ் ஒப்பந்தம் மற்றும் ஐ.நா. வின் பணிநிரல் 2030 ஆகியவற்றை மையமாகக் கொண்ட தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் மீதான கவனத்தைச் செலுத்துகிறது.

# மாநிலச் செய்திகள்

## மாறுபக்கக் கொழுப்புகள் - விழிப்புணர்வு

- வணிக ரீதியாக கிடைக்கப் பெறும் உணவுப் பொருட்களில் உள்ள மாறுபக்கக் கொழுப்புகளின் தீமையான விளைவுகள் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான செயல் நடவடிக்கையை கேரளாவின் சுகாதாரத் துறை தொடங்கியுள்ளது.
- மேலும் மாறுபக்கக் கொழுப்புகளுக்கென்று தற்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ள சட்டப்பூர்வமான தகுதிநிலைகளை அவை பூர்த்தி செய்வதற்காக உள்ளூர் உணவு உற்பத்தி தொழிற்சாலைகளை அந்த செயல் நடவடிக்கை ஊக்குவிக்கின்றது.
- இந்த ஓராண்டு கால செயல்திட்டமானது பின்வரும் குறிப்பிட்ட இலக்குகளின் மீது கவனத்தைச் செலுத்துகிறது.
    - உணவு வணிக நிறுவனங்களிடையே மாறுபக்கக் கொழுப்பு மற்றும்
    - உணவு வகைகளை மாறுபக்கக் கொழுப்பற்ற வகையில் எவ்வாறு பாதுகாப்பது குறித்து அறிவியல்பூர்வ அமர்வுகள் மற்றும் பயிற்சிகளை வழங்குதல்.
- உலக சுகாதார நிறுவன அறிக்கையின்படி,
    - மாறுபக்கக் கொழுப்பு உட்கொள்ளுதலானது மொத்த ஆற்றலை எடுத்துக் கொள்ளுதலில் 1 சதவிகிதத்திற்குக் கீழ் இருக்க வேண்டும்.
    - இது 2023 ஆம் ஆண்டில் உலக உணவு விநியோகித்தலில் மாறுபக்கக் கொழுப்பை முழுமையாக ஒழித்தலை ஏற்படுத்த எண்ணுகின்றது.
- உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆணையமானது (Food Safety and Standards Authority of India - FSSAI) உணவில் மாறுபக்கக் கொழுப்பின் வரம்பு 2 சதவிகிதம் என பரிந்துரைத்துள்ளது. மேலும் இது 2022 ஆம் ஆண்டில் உணவிலிருந்து மாறுபக்கக் கொழுப்பை ஒழிக்க எண்ணுகின்றது.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## "கிராண்ட் கிராஸ் ஆப் தி ஆர்டர் ஆப் சிவில் மெரிட் விருது"

- இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரான சுஸ்மா சுவராஜின் மூன்று நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தின் போது, ஸ்பானிஷ் அரசாங்கம் அவருக்குப் புகழ்பெற்ற "கிராண்ட் கிராஸ் ஆப் தி ஆர்டர் ஆப் சிவில் மெரிட் விருது" வழங்கி கௌரவிக்க விருக்கின்றது.
- இந்த விருதானது மைத்திரி நடவடிக்கையின் மூலம் இந்தியா ஒரு துரிதமான நடவடிக்கை எடுத்ததை அங்கீகரிப்பதற்காக ஸ்பானிஷ் அரசாங்கத்தினால் வெளியுறவுத் துறை அமைச்சருக்கு வழங்கப்படவிருக்கிறது.
- "மைத்திரி நடவடிக்கை" என்பது 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது, அந்நாட்டிலிருந்து 71 ஸ்பானிஷ் மக்களை மீட்டு அவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை இந்தியா வழங்கியது.

# இதரச் செய்திகள்

## பாப்டா திரைப்பட விருதுகள் 2019

- திரைப்படத் துறைக்காக பிரிட்டிஷ் மற்றும் சர்வதேச திரைப்படங்கள் வழங்கிய சிறந்த பங்களிப்புகளைக் கௌரவிப்பதற்கான ஒரு வருடாந்திர விருது வழங்கும் விழாவில் பிரிட்டீஷ் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி கலை நிறுவனத்தினால் பாப்டா (BAFTA - British Academy of Film and Television Arts) விருதுகள் வழங்கப்பட்டன.
- "The Favourite" என்ற ஆங்கிலத் திரைப்படம் இந்தத் திரைப்பட விழாவில் ஆதிக்கம் செலுத்தி, 7 விருதுகளைப் பெற்றுள்ளது.
- மெக்சிகோவைச் சேர்ந்த திரைப்படமான "ரோம்" நான்கு விருதுகளைப் பெற்றுள்ளது.

- - - - - - - - - - - - - - -